**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**திருப்பூர்.**

**<u>அ.வ.எண்.</u>** : **<u>193/2021</u>**

**<u>பி. சா.</u>** **<u>1</u>**

**பெயர்** : ராமசாமி

---

**நாள்: 18.08.2025**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 11.01 am to 11.17am**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>:**

எனது தரப்பில் 03.03.2020 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் நகல் **பி.சா.ஆ.1.** 09.03.2020 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் நகல் **பி.சா.ஆ.2.** கந்தாய ரசீது **பி.சா.ஆ.3.** மின் கட்டண ரசீது இரண்டு எண்ணிக்கைகள் கொண்டது **பி.சா.ஆ.4 வரிசைகள்.** சொத்து வரிசை 3 எண்ணிக்கைகள் கொண்டது **பி.சா.ஆ.5 வரிசைகள்.** கணினி சிட்டா 4 எண்ணிக்கைகள் கொண்டது **பி.சா.ஆ.6 வரிசைகள்.** கோவை 1 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நகல் மனு **பி.சா.ஆ.7.**வங்கியில் பணம் செலுத்தியதற்கான ரசீதுகள் 4 எண்ணிக்கைகள் கொண்டது **பி.சா.ஆ.8 வரிசைகள்.** ஆறுச்சாமியின் வாரிசு சான்றிதழ் **பி.சா.ஆ.9.** ஆகியவற்றை எனது தரப்பு சான்றாஆவணமாக குறியீடு செய்ய வேண்டிக்கொள்கிறேன்.

**18.08.2025 அ.வ.எண்.193/2021 பி.சா. 1 ராமசாமி**

**குறுக்குவிசாரணை**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என் மனைவி மீது தான் விவகாரத்து வழக்கு தாக்கல செய்து உத்தரவு பிறப்பிக்கபட்டது என்றால் சரிதான். வாதி என்னுடைய மகள் என்றால் சரிதான். என் மனைவி மீது போட்ட வழக்கில் என் மகள் தரப்பினர் இல்லை என்றால் தெரியவில்லை ஆனால் அந்த வழக்கில் பணம் கொடுத்துவிட்டேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள சொத்தை பணம் கொடுத்து கிரயம் வாங்கினேனா என்றால் இல்லை. என் அப்பா என் அம்மாவிற்கு 03.03.2020ம்தேதியில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் அம்மா அந்த சொத்தை எனக்கு 09.03.2020ம் தேதியில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்து என்னுடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் என் மகளிடம் இருந்து தாவா சொத்துகளை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் 2வது திருமணம் செய்துவிட்டேன் என்றால் சரிதான். 2வது திருமணத்தில் எனக்கு பிரணிதா என்ற மகள் உள்ளார் என்றால் சரிதான்.

<u>18.08.2025 அ.வ.எண்.193/2021 பி.சா. 1 ராமசாமி</u>

2 வது திருமணத்தின் போது பிறந்த குழந்தைக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை இந்த வாதிக்கு உள்ளது என்றால் சரியல்ல வாதிக்கு ஏற்கனவே செட்டில்மெண்ட் செய்து முடித்துவிட்டேன்.

வாதி மைனர் ஆக இருக்கும்போது அவருடைய சொத்தை பொறுத்து ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்டேனா என்றால் இல்லை , அதனால் வாதிக்கு 3 ல் 1 பாகம் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. விவகாரத்து மனுவில் ஏற்பட்ட உடன்பாடு எனக்கும் என் மனைவிக்கும் ஏற்பட்டது என்றும் அது எனது மைனர் மகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல அவர் பெயர் வைத்து தான் பணம் கொடுக்கப்பட்டது. இதுவரை வாதி ஜீவானம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் இல்லை. அதனால் என்னுடைய சொத்தில் வாதி 3 ல் 1 பாகம் கோர உரிமை உடையவர் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2025.08.18 14:10:09 +0530

II Additional District and Sessions Judge,
Tiruppur.